## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 78/2022

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 6 (LW- 20 ) | நாள் | 26.02.2026 |
| பெயர் | வள்ளி | தொழில் | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | கோவிந்தராஜன் | கிராமம் | நாகப்பட்டினம் |
| தாலுக்கா | கும்பகோணம் | வயது | 47 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டிணம் மாவட்ட குற்ற பதிவேடுகள் கூடத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2021ம் ஆண்டு குத்தாலம் காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் மங்களநாதன் என்பவர் 27.11.2021 அன்று காலை 6.00 மணியளவில் மூவலூர், பக்கிரியாபிள்ளை தெருவை சேர்ந்த தங்கமணி என்பவரின் மனைவி மல்லிகா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று குத்தாலம் காவல் நிலைய குற்ற எண். 863/2021, ச/பி. 174(3) குவிமுச கீழ் பதிவு செய்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 2** ஆகும். வழக்கு விசாரணைக்காக வழக்கு கோப்பை என் பார்வைக்கு வைத்தார். நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடமான மூவலூர், கடைதெரு, வேலு என்ற டெய்லர் கடை அருகில் சென்று சாட்சிகள் மணிமாறன், மகேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரை படம் தயார் செய்தேன். அவை முறையே **அசாஆ 3 மற்றும் 4** ஆகும். பிறகு சம்பவம் குறித்து புகார் கொடுத்த புகார்தாரர் மல்லிகா என்பவரையும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு

சென்று அங்கு சாட்சிகள் முன்னிலையில் சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இறந்துபோன வைத்தியநாத சாமி என்பவரின் பிரேதத்தின் மீது காலை 10.00 முதல் 11.30 வரை பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேதவிசாரணை அறிக்கை அசாஆ 5** ஆகும். இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய முதல் நிலைகாவலர் அசோக்குமார் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பினேன். அசோக்குமார் பிரேத பரிசோதனை முடித்து பிரேத்திலிருந்து எடுக்கப்பட்ட பச்சை நீலம் வெள்ளை நிறத்தில் கட்டம்போட்ட இரத்தக்கறை படிந்த கைலி ஒன்று **சாபொ –1** மற்றும் வெள்ளை நிறத்தில் கருப்பு நிற கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்று **சாபொ – 2** ஆகியவற்றை தனியறிக்கை மூலம் ஒப்படைத்தார். அவர் கொடுத்த தனியறிக்கை **அசாஆ 6** ஆகும். பிறகு சம்பவ சாட்சிகள் பாலமுருகன், பெருமாள், விமல்ராஜ், வாசுதேவன், பூவழகி, சரவணன், செந்தில் குமார், கஸ்தூரி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு இந்த வழக்கில் இறந்து போன நபர் கொலையுண்டு இறந்துபோனதாக தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவை 174(3) குவிமுச பிரிவிலிருந்து 302 இதசவாக பிரிவ மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த **பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 7** ஆகும். பிறகு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி சென்ற போது மல்லியம் இரயில் நிலையம் அருகில் நின்று கொண்டிருந்து திவாகர் மற்றும திணேஷ் ஆகியோரை சாட்சிகள் அடையாளம் காட்ட 28.11.2021 அன்று 13.0 மணியளவில் காரணம் கூறி கைது 1வது எதிரி திவாகர் என்பவரை விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுத்தலுமின்ற கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் ராஜா, த/பெ. ராஜேந்திரன் மற்றும் பழனிவேல், த/பெ. கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தில் பயன்படுத்திய மாரீப்பர் கட்டையை எடுத்து ஆஜர் செய்வதாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்

**அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 8** ஆகும். அதனடிப்படையில் மூவலூர் பக்கிரியப்பிள்ளை தெரு சென்று எதிரிகளின் கூறை வீட்டில் உள்ள எரவாணத்தின் வெளிப்புறத்திலிருந்து திவாகர் என்பவர் எடுத்து ஆஜர் செய்த சுமார் 68.5 செமீ நீளமும் சுமார் 5 செமீ அகலமும் உள்ள ரத்தக்கறை படிந்த மரரீப்பர் கட்டை **சாபொ – 3** மற்றும் Lit fit shirts என்று எழுதப்பட்ட கருப்பு நிற லேபிள் உள்ள காலரில் ஆரஞ்ச் கலர் கலந்த மஞ்சள் நிறத்தில் இரத்தகறை படிந்த எதிரி திவாகரின் முழுக்கை சட்டை ஒன்று **சாபொ – 4** மற்றும் Viners, மயிலாடுதுறை என்று எழுதப்பட்ட கருப்பு நிற லேபிள் உள்ள சிமெண்ட் வெள்ளை சந்தனம் ஆகிய நிறங்களில் பெரிய கட்டம் போட்ட இரத்தக்கறை படிந்த எதிரி தினேஷ் என்பவரின் அரைக்கை சட்டை ஒன்று **சாபொ – 5** ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை சாட்சிகள் ராஜா, பழனிவேல் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 9** ஆகும். பிறகு எதிரிகள் மற்றும் தடயபொருட்களுடன் காவல் நிலையம் வந்து எதிரிகளை திரேக சோதனை செய்து முறையே பாரா காவலர் வசம் ஒப்படைத்தேன். பிறகு எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி தடய பொருட்கள் அனைத்தையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த **படிவம் 91 அசாஆ 10** ஆகும். பிறகு இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய பொருட்களை ரசாயன பகுப்பாய்விற்கு தலைமைக்காவலர் பன்னீர் செல்வம் என்பவர் மூலம் நீதிமனத்திலிருந்து தஞ்சாவூர் ரசாயன பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பினேன். பிரேத பரிசோதனையின்போது சேகரம் செய்யப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை முதல் நிலை காவலர் அசோக்குமார் என்பவர் மூலம் ரசாயன பகுப்பாய்வு கூடத்திற்கு அனுப்பினேன். 28.11.2021 அன்று இவ்வழக்கில் இறந்த நபரின் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் ரவீந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 11** ஆகும். பிறகு இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிகள் ராஜா,

26/2/24

பழனிவேல் மற்றும் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சி சங்கர் ஆகியோரை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்தவரின் உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனை மேற்கொண்ட சேதுராமன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கொடுத்த அந்த **ரசாயன பரிசோதனை அறிக்கை அசாஆ 12** ஆகும். 10.01.2022 அன்று தஞ்சாவூர் ரசாயன பகுப்பாய்வு கூடத்தில் இவ்வழக்கின் தடய பொருட்களை ரசாயன பகுப்பாய்வு மேற்கொண்ட சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கொடுத்த அறிக்கை **அசாஆ 13** ஆகும். 11.01.2022 அன்று ரசாயன பகுப்பாய்வு கூடத்திலிருந்து வரப்பெற்ற செரலாஜி அறிக்கை **அசாஆ 14** ஆகும். 26.02.2022 அன்று குத்தாலம் காவல் நிலைய காவலர்கள் அசோக்குமார், பன்னீர்செல்வம் மற்றும் உதவி ஆய்வாளர் மங்கலநாதன் ஆகியோரை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் சட்டப்பிரிவை 342, 302, உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது ச/பி. 342, 302, உ/இ 34 இதச கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மூவலூர் கடைவீது அங்கு நிறைய கடைகள், வீடுகள் உள்ள இடம் என்றால் சரிதான். அந்த சாலை மயிலாடுதுறை-கும்பகோணம் சாலை நிறைய போக்குவரத்து உள்ள இடம் என்றால் சரிதான். புகாரில் இறந்துபோன நபர் அன்றைய தினம் மது அருந்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் தான் மது அருந்தியதாக சொல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்துபோன நபர் மது அருந்தியாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். காயம் பட்ட நபர் மருத்துவ சிகிச்சை

செல்லும்போது மருத்துவமனை வளாகத்தில் இறந்துவிட்டார் என்று சாட்சிகளை விசாரித்தபோது தெரியவந்தது. மது போதையில் நிலைதடுமாறி கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை மறைத்து பொய்யாக புகார் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை பெற்று நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் சொன்னபடி சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தடய பொருட்களையும் சட்டப்படி கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்ற சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை எதுவும் செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

[illegible]